7. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்.

அ. சட்டப்படிக்கான விதிகளும், ஆணைகளும்.

179. சென்னை, எழும்பூர், அரசு அருங்காட்சியகம் வளாகத்தில் இந்தியாவில் சீனா விழா என்ற பொருட்காட்சியில் விற்கப்பட்ட கைவினைப் பொருட்களுக்கு விற்பனை வரி செலுத்துவதிலிருந்து விலக்களித்தல் குறித்து வணிக வரிகள் மற்றும் சமய அறக்கட்டளைகள் துறையின் 7-12-1992 ஆம் நாளிட்ட 425 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிக்கை [1959 ஆம் ஆண்டு தமிழ்நாடு பொது விற்பனை வரிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 1/1959) 53 (5) பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப்பெற்றது].

180. வேலூர், திருவாளர்கள் பாரதி மெட்டல் ரீபைனரீஸ் நிறுவனத்தினால் செலுத்தப்பட வேண்டிய 1983-84 முதல் 1985-86 ஆம் ஆண்டு வரைக்கான விற்பனை வரி மற்றும் கூடுதல் வரியை தள்ளுபடி செய்வது குறித்து வணிகவரிகள் மற்றும் சமய அறக்கட்டளைகள் துறையின் 17–12–1992 ஆம் நாளிட்ட 441 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை [1959 ஆம் ஆண்டு பொது விற்பனை வரிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 1/1959)53 (5) பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப்பெற்றது]

181. 1952–ஆம் ஆண்டு அமைச்சர்கள், சட்டமன்றப் பேரவைத் தலைவர் மற்றும் சட்ட மன்ற மேலவைத் தலைவர்களின் அரசு சிருந்துகளை பழுது பார்ப்பது மற்றும் பராமரிப்பது விதிகளில் திருத்தமொன்று செய்வது குறித்து பொதுத் துறையின் 2-4-1992–ஆம் நாளிட்ட 405–ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை [1951–ஆம் ஆண்டு தமிழ்நாடு சம்பளங்கள் வழங்கல் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 20/1951) 14 (3) பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப்பெற்றது.]

182. 1987–88-ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியத்தின் ஆண்டறிக்கை [1974-ஆம் ஆண்டு நீர் (மாசு தடுப்பு மற்றும் கட்டுப்பாடு) சட்டத்தின் (மத்தியச் சட்டம் 6/1974) 39 (2) பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது] (தமிழ், ஆங்கிலம்).

183. 1988–89-ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியத்தின் ஆண்டறிக்கை [1974 ஆம்

ஆண்டு நீர் (மாசு தடுப்பு மற்றும் கட்டுப்பாடு) சட்டத்தின் (மத்தியச் சட்டம் 6/1974) 39 (2) பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது.] (தமிழ், ஆங்கிலம்).

184. 1989–90-ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியத்தின் ஆண்டறிக்கை [1974-ஆம் ஆண்டு நீர் (மாசு தடுப்பு மற்றும் கட்டுப்பாடு) சட்டத்தின் (மத்தியச் சட்டம் 6/1974) 39 (2) பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது.] (தமிழ், ஆங்கிலம்).

185. 1990–91-ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியத்தின் ஆண்டறிக்கை [1974-ஆம் ஆண்டு நீர் (மாசு தடுப்பு மற்றும் கட்டுப்பாடு) சட்டத்தின் (மத்தியச் சட்டம் 6/1974) 39 (2) பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப்பெற்றது.] (தமிழ், ஆங்கிலம்).

ஆ. அறிக்கைகள், அறிவிக்கைகள், ஏனைய தாள்கள்.

189. கோரிக்கை எண் 20— வேளாண்மை குறித்த கொள்கை விளக்கக் குறிப்பு, 1993-94 (தமிழ், ஆங்கிலம்),

190. வேளாண்மைத் துறை குறித்த செயல்வினை முறைத் திட்டம், 1993-94 (தமிழ், ஆங்கிலம்).

191. அரசு உறுதிமொழிக் குழுவின் ஒன்பதாவது அறிக்கை, 1992-93.

192. உடுக்குறியிடாத வினாக்கள் — விடைகள் (இருபதாவது பட்டியல்) (வரிசை எண். 1 முதல் 100 வரை).

193. உடுக்குறியிடாத வினாக்கள்— விடைகள் (இருபத்தொன்றாவது பட்டியல்) (வரிசை எண் 1 முதல் 100 வரை.)